முருகப்பெருமான் துணை

**மகான் ரோமரிஷி அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.06.2022**, சனிக்கிழமை

1. அருள் வடிவான ஞான குருவே
ஆறுமுகனார் அவதார வடிவே
அருள்பலம் தந்து உலகை மீட்க
அவதாரம் எடுத்த குருராஜனே
2. அரசனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது விடைதிங்கள்
இருபானென் திகதி காரிவாரம்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 28 ம் நாள், 11.06.2022 சனிக்கிழமை)
இயம்பிடுவேன் அருளாசி தன்னை
3. தன்னையே ரோமரிஷி யானும்
தரணியே பாதுகாப்புற உரைப்பேன்
மண்ணுலகில் அரங்கன் காட்டும்
மார்க்கமாம் சன்மார்க்கம் பரவ
4. பரவவே உலகம் எங்கிலும்
பரோபகார நிலை வளரும்
பரவவே மக்களிடை மாற்றம்
பண்பான குணங்களாக மாறும்
5. மாறுமே சுயநல மனமாச்சர்ய
மகா கெட்டவைகள் எல்லாம்
மாறியே பொதுநல நோக்கு
மக்களை மக்கள் சமநிலை ஆக
6. ஆகவே கருதும் உயர்நிலை
ஆபத்தை வெல்லும் சக்தியும்
செகத்தில் எவ்வித பேதமுமின்றி
செப்பிடுவேன் சமதர்ம சமத்துவ குணம்
7. குணமிக்கவர்களாக உலகோர்
குறைவிலா தேறி இனிதே
ஞானவான்கள் ஆவர் யாவரும்
நம்பிக்கை தரும் மனபலம் கூடி
8. கூடியே உயர் மார்க்கமாம்
குருவரங்கன் மார்க்கம் தன்னால்
தேடியே உலகோர் இணைந்து
தேசிகன் மூலம் ஞானிகளாக
9. ஆகவே தேற்றம் அடைந்து
அனைவரும் உலகை மாற்றும்
மகான்களாக மகா சக்திகளாக
மறுமை மரணம் வெல்லுபவர்களாக

10. ஆகவே ஆற்றல் கூடி
அகிலத்தை மாறுதல் செய்யும்
மகாசக்தி கொண்டு சிறப்பர்
மண்ணுலகில் ஞான ஆட்சி படைப்பர்

11. படைக்கவே அரங்கன் வந்த
பழுதிலா அவதார நோக்கம்
தடையற பூர்த்தி ஆகும்
தாமுரைத்த அருளாசி முற்றே

—சுபம்—